21 SEP 1996

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 05 சனிக்கிழமை (21-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 217



# அனுராவைக் கொல்ல முயற்சி! மயிரிழையில் உயிர் தப்பினார்!!

## ஐ. தே. க. பிரமுகர் உட்பட 4 பேர் பலி! வெள்ளைவான் குழு கைவரிசை

கொழும்பு, செப்ரெம்பர் 21

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்கா சென்ற வாகன அணி மீது நேற்றுப் பிற்பகல் நீர்கொழும்பு சீதுவவில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந் தெரியாத குழுவினர் சரமாரியாகத் துப்பாக்கித்தாக்குதல் நடத்தினர். அனுரா பண்டாரநாயக்கா இத்தாக்குதலில் உயிர் தப்பினார். ஆனால் அவரது வாகன அணியில் மற்றொரு வாகனத்தில் வந்துகொண்டிருந்த ஐ. தே. க. அரசியல்வாதி, தொண்டர்கள் உட்பட நால்வர் உயிரிழந்தனர்; மூன்று பெண்கள் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர்.

நீர்கொழும்புஆஸ்பத்திரிக்கு அருகில் நேற்றுப்பிற்பகல் 2-15 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் வன்முறை ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக அனுரா பண்டார நாயக்காவும் அவரது குழுவினரும் நீர்கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு நேற்று சென்றிருந்தனர்.

அங்கு சுமார் நாலரை மணி நேரம் அனுரா குழுவினர் தங்கியிருந்தனர் பின்னர் அவர்கள் நீதிமன்றத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு நோக்கி வாகன அணியில் வந்து கொண்டிருந்தபோது சீதுவப் பகுதியில் — நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு முன்பாக — வைத்துத் திடீர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாரயில்நிலையத்தில் துப்பாக்கிப் பிரயோகம்

### 5 பொலீஸார் காயமடைந்தனர்

கொழும்பு செப். 21

நேற்று முன்தினம் இரவு 10-15 மணியளவில் வவுனியா ரயில் நிலையப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 பொலீஸார் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் பெண் பொலீஸார் என்றும் காயமடைந்த ஐவரும் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் நிலைய பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்பான பிரதேசமான வவுனியாவில் இப்படியான சம்பவம் இடம் பெறுவது புதுமையாக உள்ளது என்று ''திவயின'' பத்திரிகையின் வவுனியாச் செய்தியாளர் பி. பி. சி. க்கு தெரிவித்தார்.

## கரை ஒதுங்கிய சடலம்

புங்குடுதீவு-வேலணை தாம் போதிக்கு அருகில் ஓர் ஆணின் சடலம் நேற்றுக் காலை கரை ஒதுங்கியது.

ஊதிப் பருத்திருந்த இந்த சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. (இ-3)

## தாக்குதலுக்கு ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும்

### அனுரா பின்னர் பேட்டி

கொழும்பு, செப். 21

''நீர்கொழும்பில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதலுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்கவேண்டும்.''

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரும் தாக்குதலின் இலக்கு என்று கருதப்படுபவருமான அனுரா பண்டார நாயக்கா தெரிவித்திருக்கின்றார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கும் கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் ''யெஸ்.எவ்.எம்'' வானொலி சேவைக்கும் வழங்கிய பேட்டிகளில் அவர் கூறியதாவது:-

''நாம் நீதிமன்றக் கட்டடத்தை விட்டு வெளியே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து வவுனியா செல்ல புதன்கிழமை முதல் புதிய நடைமுறை

கொழும்பு, செப். 21

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இருந்து வவுனியாவுக்குள் வரும் மக்களை நொச்சிமோட்டை இராணுவ முன்னணிக் காவலரண் ஊடாக நாளாந்தம் உள்ளே அனுமதிப்பதில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் குறித்து இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்

இதன்படி —

யாழ். மாவட்டத்துக்குச் செல்லவிரும்பும் மாணவர்கள் நூறு பேர் —

வயதுக்கட்டுப்பாட்டு நியதிக் குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட முப்பது குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் —

தென் பகுதிக்குச் செல்ல வேண்டிய வயதுக்கட்டுப்பாட்டுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் ஐம்பது பேர் —

இடம் பெயர்ந்து வருகின்ற வயதுக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளை கொண்டிராத — சகல குடும்பங்களினதும் உறுப்பினர்கள் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி அந்தஸ்து வழங்க முடிவு

சென்னை,செப் 21

இலங்கையில் இருந்து கடந்த ஜூலை மாதம் முதல் தமிழ் நாட்டுக்கு வரத் தொடங்கியிருக்கும தமிழ் அகதிகளுக்கு முறையாக அகதிகள் அந்தஸ்து வழங்குவது என்று தமிழ்நாடு மாநில அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்கான அரசு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்போது மண்டபம் அகதிகள் முகாமில் வைக்கப்பட்டிருக்கும் இந்த அகதிகள் விரைவில் பல்வேறு முகாம்களுக்கும் அனுப்பப்பட இருக்கிறார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகரில் பெரும் குண்டு வெடிப்பு

### பெண் ஒருவர் பலியானார்

கொழும்பு, செப். 21

மட்டக்களப்பு நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பில் ஐம்பது வயதுப் பெண் ஒருவர் பலியானார்.

மட்டக்களப்பு நகரப் பகுதியின் எல்லைப் புற வீதியோரத்தில் குப்பை கூளங்களுக்கிடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே பெரும் சத்தத்துடன் வெடித்து முழு மட்டக்களப்பு நகரப் பகுதியையும் அதிர வைத்தது.

குப்பையை அள்ளச் சென்ற மட்டக்களப்பு மாநகரசபையின் பெண் ஊழியரே அதில் இருந்த குண்டுக்குப் பலியானார்.

இந்தக் குண்டு வெடிப்பால் அருகிலிருந்த பல வீடுகள் சேதமடைந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க) )

## 21 ஈழ அகதிகள், 8இந்தியர் மன்னார்க் கடலில் கைது

கொழும்பு, செப். 21

மன்னாரில் இருந்து இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு இந்திய இழுவைப் படகுகளை தலைமன்னார்க் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்ட சமயம் அவற்றில் 21 ஈழ அகதிகளும் 8இந்தியர்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட 29 பேரும் கடற்படையினரால் தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## ஈழ அகதிகளின் படகு நெடுந்தீவில் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், செப். 21

மன்னார் பேசாலையில் இருந்து தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகளின் படகு காலநிலை சீர் இல்லாத காரணத்தால் நெடுந்தீவில் கரை ஒதுங்கியது.

16 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் இந்தப் படகில் இருந்தனர்.

காலநிலை சீரின்மை காரணமாக இவர்கள் சென்ற படகு கச்சதீவில் கரை ஒதுங்கியதாகவும் —

இருநாள்கள் அங்கு தங்கியிருந்த இவர்கள் உணவுக்கு கஷ்டப்பட்டதாகவும் —

பின்னர் அங்கிருந்து புறப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் மோதல்

யாழ்ப்பாணம் நாவற்குழியில் நேற்று முன்தினம் இரவு பாதுகாப்புப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்று இடம் பெற்றதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-3)

## பிரதம தபாலகத்தில் மற்றும் ஒரு தபாற் குண்டு

மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் மற்றொரு தபாற் குண்டு நேற்று முன்தினம் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

தபால் தரம் பிரிக்கப்படும் போது நீளமான கடித உறை ஒன்றின் மீது சந்தேகம் தோன்றியதையடுத்து அருகில் உள்ள படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

கல்லடி இராணுவ முகாமில் இருந்து குண்டைச் செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டதும், சந்தேகத்துக்குரிய தபால் உறை பாதுகாப்பாக வெளியே கொண்டுவரப்பட்டது. படையினர் வேட்டுக்களைத் தீர்த்ததும் கடிதப்பொதியில் இருந்த குண்டு வெடித்தது.

கடந்த வாரமும் மட்டக்களப்பு தபாலகத்தில் வைத்து மற்றும் இரு தபாற் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லை. பகுதிகளில் மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு

## ஆபத்தான விளைவு குறித்து மருத்துவக்குழு எச்சரிக்கை

திருகோணமலை, செப். 21

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படப் போகின்றது. அதன் விளைவுகள் ஆபத்தானவையாக இருக்கும்.

—இவ்வாறு அரசாங்கத்தை எச்சரித்திருக்கின்றது எம். எஸ். எவ். எனப்படும் பிரெஞ்சு மருத்துவக் குழு.

இது தொடர்பாக அக்குழுவின் பணிப்பாளர் டாக்டர் கிலோமோர் பேட்டோலிற்றோ அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும்பாலான மருத்துவப் பணிகளை எம். எஸ். எவ். அமைப்பே மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இம்மாவட்டங்களில் உள்ள எஞ்சிய மருந்துகளும் இன்னும் ஒரு வார காலத்துக்குள் தீர்ந்துவிடும். அதன் பின்னர் நிலைமை மிக மோசமாக இருக்கும் என்று எம். எஸ். எவ் பணிப்பாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்பகுதிக்குத் தேவையான மருந்துப் பொருள்களின் பட்டியல் சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு ஊடாக இராணுவச் செயற்பாடு தலைமையகத்தின் மருத்துவப் பிரிவுக்கு அனுப்பி அப்பிரிவின் அனுமதி பெற்ற பின்னர் மருந்துப் பொருள்கள் அப்பகுதிக்கு தருவிக்கப்படுவதே வழக்கமான நடைமுறையாகும்.

இதன்படி இப்பிரதேசத்துக்குத் தேவையான மருந்துப் பொருள்களின் பட்டியல் அனுப்பப்பட்டும் அது இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

இதற்கிடையில்—

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மல்லாவி ஆஸ்பத்திரிக்கு உரிய மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

அப்பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் உதவியுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடமாடும் வைத்திய சேவையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மருந்துத் தட்டுப்பாடு ஆபத்து ஏற்பட்டிருப்பது குறித்து சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.எவ் எஸ்.சமரநாயக்காவிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது-

தாம் இவ்விடயம் குறித்து தகவல் ஏதும் வெளியிட முடியாது என்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திடம் அல்லது இணைப்பதிகாரி ஐ. எல். தாவூத்திடம் கேட்டறிந்து கொள்ளும்படியும் அவர் பதிலளித்தாராம்.

இணைப்பதிகாரி ஐ. எல் தாவூத்துடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை என்று கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார். (உ-150)


றெனி 

மூக்குக்கண்ணாடி அகம்

உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்து
உடன் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

றெனி மூக்குக்கண்ணாடி அகம்

இல. 288, நாவலர் வீதி,
(யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக)
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


கண்டி வீதி, சாவகச்சேரி.

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(42808)


## 3-ம் ஆண்டில் நினைவுகள்

மலர்வு: 13 — 06 — 1978



உதிர்வு: 21 — 09 — 1993

அமரர்

### குமாரகுலசிங்கம் சிவகுமாரன்

ஆண்டு மூன்று சென்றாலும்
எம் மனம் ஆறவில்லை
அழுதாலும் தொழுதாலும்
உம் நினைவு அகலவில்லை
எம் குடும்பத்தின் குலவிளக்காய்
அன்புச் செல்வமாய் அறவழிகாட்டும்
ஆற்றலுள்ள சகோதரனாய் இறைவன்
எமக்களித்த மாபெரும் கொடை நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா
அக்காமார், அண்ணன்
அத்தான்மார், மருமக்கள்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(42809)

## சமய நிகழ்ச்சிகளில்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நாளை காலை 10 மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் திங்கட்கிழமை காலையும், கொடியிறக்கம் அன்று பி ப 3 மணிக்கும் இடம் பெறும். (அ-30)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை மு ப 10 மணிக்கு நடைபெறும். வசந்தமண்டபப் பூசை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

திங்கட்கிழமை மு. ப 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று பி ப 4.45 மணிக்குக் கொடியிறக்கமும் இடம் பெறும். (அ-30)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

இவ்வருடாந்த உற்சவத்தின் சிறப்பு உற்சவமான கப்பல் திருவிழா இம்மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இம்மாதம் 30 ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும், மறுநாள் 31ஆம் திகதி பட்டுத்தீர்த்தமும் நடைபெறுவதுடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

உற்சவ தினங்களில் விசேட சமய சொற்பொழிவுகள் இடம்பெறும். (அ-173)

★ ★ ★

இன்று புரட்டாதிச் சனி விரதம் அனுஷ்டிக்கப்படும். அதனையொட்டி ஆலயங்களில் விஷேட அபிசேக பூசைகளும், எண்ணெய்ச் சட்டி எரித்தல், நவக்கிரக தோஷ நிவர்த்தி வழிபாடுகள் என்பனவும் நடைபெறும்.

கிருஷ்ணன் ஆலயங்களில் நவக்கிரக தோஷ நிவர்த்தி வழிபாடுகள், எண்ணெய்ச் சட்டி எரித்தல் ஆகியன விசேடமாக நடைபெறும் (அ-30)

★ ★ ★

ஸ்ரீசீரடி பாபா பிறந்த தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் ஸ்ரீசீரடி பாபா சற்சரித படனம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

சற்சரித படன பூர்த்தி ஸ்ரீசீரடி பாபா பிறந்த தின விழா இம்மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்போது பூர்த்தியாகும் (அ)

# செஞ்சிலுவைக் கப்பலில் குடாநாட்டு தபாற் சேவை

## வாரம் ஒரு தடவை நடைபெறும்

யாழ்ப்பாணம், செப். 21

குடாநாட்டுக்கான தபாற் சேவையை வாரம் ஒரு தடவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

பிரதி புதன்கிழமை தோறும் திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் நடத்தப்படும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் இச்சேவை நடத்தப்படவிருக்கிறது.

யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து தபாற் பொதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் விவகாரப் பிரிவிடம் ஒப்படைக்கப்படும் என்றும் —

அங்கிருந்து அவற்றை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பொறுப்பேற்று கப்பல் மூலம் எடுத்துச் சென்று திருகோணமலை தபாலதிபரிடம் ஒப்படைக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று குடாநாட்டுக்கான தபால்களை திருகோணமலை தபாலதிபரிடம் இருந்து பெற்று, கப்பலில் எடுத்து வந்து யாழ். பிரதம தபாலதிபரிடம் ஒப்படைக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

இந்தச் சேவை அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

# படையினர் உட்பட 9 பேரின் பிணை அனுமதி மறுப்பு!

கண்டி, செப். 21

கொள்ளைகள் தொடர்பான 9 சந்தேக நபர்களின் பிணை அனுமதி கண்டி நீதிவான் திருமதி டி. சி. மிருஞ்சி ஆராச்சியால் மறுக்கப்பட்டுள்ளது.

இந்த 9 சந்தேக நபர்களில் இராணுவத்தில் கடமையாற்றிய முன்னாள் கப்டன் ஒருவரும், தற்போது இராணுவத்தில் கடமையாற்றும் கப்டன் ஒருவரும் அடங்குவர்.

இரகசியப் பொலீசார் எனக் கூறி இந்த சந்தேக நபர்கள் கட்டுகஸ் தோட்டை, வத்தளை பொலீஸ் பகுதிகளில் பல கொள்ளைகளில் ஈடுபட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (இ-10)

## தொண்டர் அமைப்புகள் பாதயாத்திரை

கொழும்பு, செப். 21

பல தொண்டர் அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து நடத்தவிருக்கும் சமாதானப் பாதயாத்திரை இன்று மொறட்டுவசர்வோதயதலைமையகத்தில் இருந்து ஆரம்பமாகின்றது.

இச்சமாதான பாதயாத்திரை வவுனியா நோக்கிநடத்தப்படுகிறது. ஒக்ரோபர் 6 ஆம் திகதி இது வவுனியாவை வந்தடையும்.

இதில் ஜப்பான், சிலி, இத்தாலி நாடுகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்வார்கள். (இ- 3)

## கோணேஸ்வரம் ஆய்வு நூலின் 2 ஆவது பதிப்பு

திருகோணமலை, செப். 21

''கோணேஸ்வரம்'' ஆய்வு நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டு விழா கடந்த மாத இறுதியில் திருகோணமலை கோணேஸ்வர இந்துக் கல்லூரியின் சம்பந்தர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

காந்தி ஆசிரியர் பொ. கந்தையா விழாவுக்கு தலைமை வகித்தார்.

பிரதிஷ்டா பூஷணம் ஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் நூலை வெளியிட்டு வைத்தார். முதலாவது பிரதி கோணேஸராலய பரிபாலன சபைத் தலைவர் எம். கே. செல்வராசாவுக்கு வழங்கப்பட்டது.

1963 ஆம் ஆண்டு இந்த நூலின் முதற் பதிப்பு வெளியானது இந்நூலை எழுதியவர்கள் புலவர் வை. சோமாஸ் கந்தக் குருக்கள், திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் ஆவர். 33 ஆண்டுகள் கழித்து இரண்டாவது பதிப்பை ஆலடி விநாயகர் தேவஸ்தானம் வெளியிட்டிருக்கிறது. (அ- 150)

## பொ. ஐ. மு. செயற்குழு விசேட கூட்டம்

திருகோணமலை, செப் 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்குழுவின் விசேட கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை குறித்து இந்தக் கூட்டத்தில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நவம்பர் ஆறாம் திகதி அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் ''பட்ஜெட்'' குறித்தும் இக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படும் எனக் கருதப்படுகின்றது. (உ-150)

## கப்பல்கள் இன்று வடக்கே புறப்பாடு

திருகோணமலை, செப். 21

திருகோணமலையில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு மூன்று கப்பல்கள் இன்று மாலை வடக்கு நோக்கிப் புறப்படும் என்று திருகோணமலையில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது. (உ-150)


A/L 97

மீட்டல் வினா விடை வகுப்பு

DAY CLASS

தூய, பிரயோக கணிதம்

திரு. அருளானந்தம்

மீட்டல் வகுப்பு வடமராட்சியில் முதலாம் கட்டை

மணியம் கல்வி நிறுவனத்தில்

மட்டும் நடைபெறும்.

ஆரம்பம்: 23-09-96

திங்கள் 4 மணி

[42805]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீநகரில் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்!

## இன்றைய 3 ஆம் கட்ட வாக்களிப்பை குழப்புவதற்கு தீவிரவாதிகள் முயற்சி

ஸ்ரீநகர், செப். 21

இந்திய மாநிலமான காஷ்மீரில் இடம்பெறும் மாநிலத் தேர்தலில் முக்கிய கட்ட வாக்களிப்பு இன்று இடம்பெறுவதை முன்னிட்டு இந்திய அதிகாரிகள் ஸ்ரீநகரின் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்துள்ளனர்.

முஸ்லிம் பிரிவினைப் போராட்டம் தீவிரமாக இடம்பெறும் ஸ்ரீநகரில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை எதிர்த்துவரும் சக்திவாய்ந்த அனைத்துக் கட்சி சுதந்திர அமைப்பு திட்டமிட்டுள்ள ஊர்வலம் ஒன்றைத் தடுப்பதற்காக நகரின் பழைமைவாய்ந்த பள்ளிவாசலான ஜாமா மஜீத்தை எல்லைக்காவற் படையினர் சுற்றிவளைத்துக் காவல் புரிகின்றனர்.

சுமார் 30 முஸ்லிம் போராளிக் குழுக்களும் அரசியல் அமைப்புக்களும் இந்த சுதந்திர அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இந்தத் தேர்தல் வெறும் கண்துடைப்பு என உலகுக்குக் காண்பிக்க பள்ளிவாசலை நோக்கி ஊர்வலம் ஒன்றை நடத்துமாறு இந்த அமைப்பினர் காஷ்மீர் மக்களிடம் கேட்டுள்ளனர்.

நேற்றிலிருந்து 2 நாள்கள் பொது வேலை நிறுத்தத்தை நடத்துமாறும் இந்த அமைப்புக் கேட்டுள்ளது.

இதற்கிடையில் இந்தத் தேர்தல் ஓர் ஏமாற்று வேலை எனப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்பவே தேர்தல் நடத்தப்படுகிறது என பாகிஸ்தான் கூறுகிறது.

(இ-10)

## திரேஸாவுக்கு கௌரவம்

அமெரிக்காவின் மரியாதைக்குரிய பிரஜையாக அன்னை திரேஸாவை அமெரிக்க நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

அன்னை அவர்கள் உயிர் வாழும் புனிதர், இறக்குந்தறுவாயில் இருப்பவர்களுக்காகவும் நோயுற்றவர்களுக்காகவும், அயராது உழைத்தவர் என அவை அங்கத்தவர் ஒருவர் புகழாரஞ் சூட்டினார்.

(இ-10)

## கத்தோலிக்கர் கூடுதலாக வாழும் நாடு பிறேசில்

பிறேசில், செப். 21

உலகில் கத்தோலிக்க மக்கள் எண்ணிக்கையில் பிறேசில் முதலிடம் வகிப்பதாக கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கிறது.

பிறேசிலில் சுமார் 13 கோடியே 37 இலட்சம் கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர்.

8 கோடியே 90 இலட்சம் கத்தோலிக்கர்கள் வாழும் மெக்சிக்கோ 2 ஆவது இடத்தையும், 5 கோடியே 60 இலட்சம் கத்தோலிக்கர்கள் வாழும் அமெரிக்கா மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

நேபாளம் மிகக் குறைந்த கத்தோலிக்கர்களைக் கொண்டுள்ளது. மிகச் சிறிய நாடான மோல்டாவில் அதிகமான சதவீதத்தில் கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர்.

(இ-10)

## உலகத் தமிழர் பத்திரிகை அமெ. மீது குற்றச்சாட்டு

'கிறீன் பரெட்ஸ்' என்னும் அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் பிரிவு கொழும்பு வந்து இலங்கை இராணுவத்தினருக்கு போர்ப் பயிற்சி அளிப்பதாகவும் —

தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு பயங்கரவாத முத்திரை குத்தும் வகையில் அமெரிக்கா அறிக்கை விட்டு வருவதாகவும் —

இலங்கைக்கு அழிவுஆயுதங்கள் விற்பதில்லை என்ற தனது பழைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு இலங்கைக்கு அழிவு ஆயுதங்கள் விற்றுவருவதாகவும் —

அத்தோடு தனக்கு அனுசரணையானநாடுகள் மூலமாக இலங்கை இராணுவத்துக்கு சலுகை அடிப்படையில் ஆயுதங்களை வழங்க உதவிவருவதாகவும் — கனடாவிலிருந்து வெளியாகும் 'உலகத் தமிழர்' என்னும் பத்திரிகை குற்றஞ் சாட்டியுள்ளது. (10)

### உலக அரங்கில்

# பலாலி – கொழும்பு விமான சேவை; கடும் பாதுகாப்பு முன் ஏற்பாடுகள்

திருகோணமலை, செப். 21

பலாலி — இரத்மலானை இடையே நடைபெறும் தனியார் விமானசேவை தொடர்பாக கடும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு இடங்களிலும் இருந்து விமானத்தில் ஏறவரும் பயணிகள் தொடர்பாகவும் அவர்களை விமானநிலையத்துக்குக் கூட்டிச் செல்வது தொடர்பாகவும் பல பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

கடந்தஆறாம் திகதி சேவையில் ஈடுபட்ட தனியார் விமானசேவையின் விமானத்தின் இறக்கைப் பகுதியில் நாய்ப்பட்டி போன்ற பொருள் ஒன்று சிக்கிக் கிடக்கக் காணப்பட்டதாகவும் —

அதனை அடுத்தே பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான எச்சரிக்கை ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டன என்றும் —

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானத்தில் சயனைட் வில்லை கண்டு பிடிக்கப்பட்டதாக ஒரு செய்தி வெளியாகியதாகவும் —

ஆனால் அது முற்றும் தவறானது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்ததாகவும் —

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

(உ-150)

## பளை பாடசாலைகளுக்கு இலவச பாடப்புத்தகம்

பளை கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பாடப்புத்தகங்கள் அடுத்தவாரம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

பளை மத்திய கல்லூரியில் ஜி. சீ ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறுவதால் இக் கல்லூரி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதும் புத்தகங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாந் தவணை முடிவடைந்த நிலையிலும் இப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே

(இ-117)

## வடமராட்சி ப.நோ.கூ. சங்கம் பளையில் புதிய கிளை

வடமராட்சி, செப். 21

வடமராட்சி கிழக்குப் பகுதியில் படையினரின் பாதுகாப்பு அரணுக்கு வெளியே வசிக்கும் மக்களின் வசதி கருதி பளையில் புதிய கிளை ஒன்றை வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பித்துள்ளது,

குறிப்பாக செம்பியன்பற்று, மாமுனை, மருதங்கேணி, வத்திராயன் உடுத்துறை ஆகிய கிராம மக்கள் சுலபமாக சிரமமின்றி நிவாரணப் பொருள்களையும் பங்கீட்டுப் பொருள்களையும் பெறுவதற்கு வசதியாக இப்புதிய கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கிராம மக்கள் இதுவரைகாலமும் மந்திகையில் அமைக்கப்பட்ட கிளையில் பொருள்களைப் பெற்று வந்தனர்.

அங்கு சென்று வருவதில் இக்கிராம மக்கள் கஷ்டங்களை எதிர் நோக்கி வந்ததாலேயே இப்புதிய கிளை திறக்கப்பட்டுள்ளது.

(இ-173)

## நெடுந்தீவு பஸ் சேவை விரைவில் ஆரம்பம்

நெடுந்தீவு, செப். 21

நெடுந்தீவுக்கான உள்ளூர் பஸ் போக்குவரத்துச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இதற்கான நடவடிக்கையை எடுப்பதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர் திரு. நா. இராமச்சந்திரனிடம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். மாவட்ட அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பஸ் போக்குவரத்துச் சேவை தடைப்பட்டிருப்பதால் நோயாளர்கள், படகுப் பயணிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் சிரமங்கள் குறித்து அத்தியட்சகரிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

(இ-111)

## யுத்தம் காரணமாக அங்கவீனர் எண்ணிக்கை இரண்டு மடங்காகியது

திருகோணமலை, செப். 21

1980 ஆம் ஆண்டில் நாட்டில் அங்கவீனர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சமாக இருந்தது. அது வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக இப்போது பத்துலட்சமாக அதிகரித்துள்ளது.

புள்ளி விவரங்கள் இந்தத் தகவலை வெளியிடுவதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அங்கவீனர் உரிமைகள் தொடர்பான சிறப்புச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அந்த எம். பி. இத்தகவலை வெளியிட்டார். (உ-150)

## மீனுக்குத் தட்டுப்பாடு

வலி. தென்-மேற்கு செப். 21

மீன்பிடித் தொழில் பாதித்திருப்பதனால் வலி மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் மீனுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வெளிப் பிரதேசங்களிலிருந்து இப் பகுதிக்கு மீன் எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள இடையூறினால்- மீன் சந்தைகள் வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றன.

வலி. மேற்கு பகுதி மக்கள் காக்கை தீவு மீனை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மீனின் விலையும் அதிகமாகியுள்ளது.

மீனவர்களும் தொழிலின்றிப் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

(இ-145)

# நகரில் மேலும் ஒரு தொகுதியினருக்கு விரைவில் மின் இணைப்பு கிடைக்கும்

## கட்டணம் அறவிடவும் ஏற்பாடு

மின்சாரம் கோரி விண்ணப்பித்துள்ளோரில் மேலும் ஒரு தொகுதியினருக்கு மின்சாரம் வழங்க மின்சாரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்சமயம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளவர்களின் வீடுகளுக்கு மின்சாரசபை அதிகாரிகள் சென்று மூன்று மின் குமிழ்கள் மட்டும் பாவிப்பதை உறுதி செய்து வருவதாகவும் —

சட்டவிரோதமாக மின் இணைப்பு பெறுவோரை மக்களின் உதவியுடன் பிடித்து அவர்களின் தொடர்பை துண்டிப்பதாகவும்—

இதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை மேலும் பலருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் — மின்சாரசபை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்,

வேம்படி மின் நிலையம் பகுதியில் உள்ள 300 பேரும் —

இந்துக் கல்லூரி மின் நிலைய பகுதியில் 300 பேரும் —

திருநெல்வேலிப் பகுதியில் 100 பேரும் — மின்சாரம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் ஒரு பகுதியினருக்கும் ஏற்கனவே மின்சாரம் வழங்கி பின்னர் துண்டிக்கப்பட்டவர்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் யாழ் நகரப் பகுதியில் 3 ஆயிரத்து 500 குடியிருப்பாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மின்சாரம் இலவசமாக வழங்கப்படுவதால் மக்கள் துஷ்பிரயோகம் செய்வதாகவும்—

விரைவில் மின்சாரத்துக்கு பணம் அறவிடப்படவிருப்பதாகவும் — அந்த அதிகாரி மேலும் தகவல் தந்தார்.

## கண்துடைப்பு என்கிறார் சம்பந்தன்

வடக்கு - கிழக்கு மாகாணசிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இணைப்புக் குழு அமைக்கப்பட்டிருப்பது வெறும் கண்துடைப்பே ஆகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் திருகோணமலை எம். பியுமான இரா. சம்பந்தன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

(உ- 150)

## கொழும்புக்கு கடலட்டை

குருநகர் செப். 21

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசத்தினால் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பதனிடப்பட்ட கடலட்டைகள் பருத்தித்துறையில் இருந்து கப்பலில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சவர்க்காரம் தயாரிக்கும் சகல உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. சங்கரன், இல.75, செம்மணி ஒழுங்கை, அரியாலை. (42766)

மேசை, அலுமாரி, கட்டில், கண்ணாடிமேசை, சோகேஸ், சிங்கர் தையல் மெசின் (Z 16 ZAG) உரல், அம்மி, ஆட்டுரல் என்பன விற்பனைக்குண்டு. பொன்கலன் விக்ரோரியா 98, மவுண்ட்கார்மல் வீதி, யாழ்ப்பாணம். (42774)

இங்கிலாந்து லிஸ்ரர் எஞ்சின் 10 Horse Power ருடன் 5 KV டைனமோ, 3 Horse Power லிஸ்ரர் எஞ்சின் ஆகியன விற்பனைக்குண்டு தொடர்பு: ஐ. குலசிங்கம், ஆலடிச்சந்தி, மானிப்பாய். (42785)

### ஆங்கிலப் பரீட்சைகள்

Spoken English 2 மாதங்களில் O/L Credit, Distinction, பெறுபேறுடைய G. A. Q Open University Peradeniya, Jaffna கற்பிக்கப்படும். B.Sc. ஆசிரியர், இல. 85, சிவன் கோவில் பின்னால் மேற்கு வீதி, திருநெல்வேலி (42790)

### இலவச திருமண சேவை

அரசாங்க உத்தியோகம் 30 வயது மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. (ஞாயிறு மட்டும் 9.30 தொடக்கம் 12. 30 வரை). ஸ்ரீலங்கா அச்சகத்திற்கு அருகில் கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். (42796)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமையாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில். (42437)

### நூல் நிலையம்

ஈழத்து, தமிழக எழுத்தாளர்களின் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், சிறுவர் இலக்கியங்களை வாசித்து மகிழ்ந்து பயனடைய வாருங்கள். லிங் லெண்டிங் லைப்ரரி, Ling Lending Library, இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. புத்தகங்களுக்குத் தரும் தொகை செலவல்ல - மூலதனமே. (42689)

## விற்பனையாளர் தேவை

மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதில் குறைந்தது 5 வருட அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை.

தகுதிக்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும்.

இல. 528, மே/பா உதயன் பணிமனை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(42781)

## மாகாணங்களுக்கிடையே ஆசிரியர் இடமாற்றம்

கொழும்பு, செப். 21

மாகாணங்களுக்கிடையிலான புதிய ஆசிரியர் இடமாற்ற முறை ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறையைச் சமாளிக்கு முகமாகவும், பல பாடசாலைகளில் அளவுக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருக்கும் நிலைக்கு பரிகாரங் காணும் நோக்கத்துடனும் இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

மாகாண சபைகளின் அனுசரணையுடன் மத்திய அரசாங்கம் இப்புதிய முறையை அமுல் செய்யும்.

கல்வித்துறையை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயுமுகமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரி மாளிகையில் கடந்த புதன்கிழமை நடந்த கூட்டமொன்றில் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது.

கல்வியமைச்சர் ரிச்சர்ட் பத்திரான, மாகாண முதலமைச்சர்கள், மாகாண கல்வியமைச்சர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர்கள் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டனர். (இ-3)

## விற்பனையாளர் தேவை

மின்சாரப் பொருள்கள் விற்பனை செய்வதில் குறைந்தது 5 வருட அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை.

தகுதிக்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும்.

இல: 529, மே/பா உதயன் பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(42782)

## தொலைக்கல்வி ஆசிரியர் பரீட்சை விண்ணப்பம்

யாழ். கல்வி வலயம் I சார்ந்த தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதிப் பரீட்சை பகுதி I, பகுதி II-க்குத் தோற்றும் சகலரையும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ)

## தென்னிந்திய திருச்சபை
## அத்தியட்சாதீன விழா-1996

நமது திருச்சபையின் அத்தியட்சாதீன விழா இம்மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

மு.ப 8. 30 நற்கருணை வழிபாடும் உதவிக் குரு அபிஷேகமும்

உதவிக்குரு அபிஷேகம் பெறுவோர்

திரு. அருளானந்தம் தேவகுணானந்தன்
(அளவெட்டி, சண்டிலிப்பாய் ஊழியன்)

திரு. அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன்
(ஏழாலை வடக்கு, ஏழாலை தெற்கு ஊழியன்)

மு. ப 11 30
கலாநிதிப்பட்டம் பெற்றவர்களுக்கு பாராட்டு வைபவம்

அதிவண. கலாநிதி டி. ஜே. அம்பலவாணர்
(முன்னாள் பேராயர்)

கலாநிதி செல்வி சி. வி. செல்லையா
(அதிபர் - உடுவில் மகளிர் கல்லூரி)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

C. T றொபேர்ட்ஸ்
செயலாளர், JD CSI

வட்டுக்கோட்டை
20 - 9- 96

(சி/3156)

## ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



| தாய் மடியில்: | சிவனடியில்: |
|---|---|
| 14—02—1934 | 23—08—1996 |

### அமரர் கந்தையா நல்லதம்பி

மாவிட்டபுரம், மடத்தடியை சேர்ந்த கந்தையா நல்லதம்பியினது ஆத்ம சாந்திக் கிரியை நாளை 22 - 09 - 96 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். தொடரும் மதிய போசனத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி நிற்கும்:

- குடும்பத்தார் -

நுணாவில் மேற்கு,
நுணாவில்.

(42803)

## எமது நிறுவனம் – குடாநாடு முழுவதும் நடத்தவிருக்கும் பரீட்சைகளும் – அடுத்த பரீட்சைத் தினங்களும் (மாதாமாதம்)

★ ஆண்டு 5 புலமைப்பரிசில் '97 (தற்பொழுது ஆண்டு 4 படிப்பவர்களுக்காக) மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் — 29-09-96 முதல்

★ ஆண்டு 9 — அரசாங்கம் டிசம்பரில் நடத்தவிருக்கும் கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ்ப் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை I 29-09-96 முதல்

★ ஆண்டு 5 மாணவர்களை - ஆண்டு 6க்கு சேர்ப்பதற்கான அனுமதிப் பரீட்சை — ஒவ்வொரு ஞாயிறும் 15-09-96 முதல்

★ 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு எல்லா பாடங்களும் மாதாந்த பயிற்சிப் பரீட்சை 26, 29-09-96

★ G. C. E. O/L டிசம்பர் 96 பரீட்சைக்காக — எல்லா பாடங்களும் மாதிரிப் பரீட்சை I 26-09-96 முதல்

★ G. C. E. A/L கணித - உயிரியல் - கலை - வர்த்தக பிரிவுகளுக்கான எல்லாப் பாடங்களும்.
ஒவ்வொரு மாதமும் — அலகு ரீதியாக — வாரம் ஒரு பாடம் 01 — 10 — 96 புதன்

★ இப் பரீட்சைகளை நடத்த விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ இப் பரீட்சைக்குத் தோற்ற வசதி இல்லாத மாணவர்கள் தபால் மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு - வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் வினாத்தாள்களுக்கு வீட்டில் வைத்தே விடையளித்து தபால் மூலம் அனுப்பி வைத்தால் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு விடைகளுடன் மீளளிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு — பதிவாளர்

பரீட்சைப்பகுதி - BOND INSTITUTES
தபால் பெட்டி: 140, யாழ்ப்பாணம்.

(42800)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1955 — 09 — 18 | 1995 — 09 — 18 |

திருமதி
### மகேஸ்வரி தெய்வேந்திரம்
( ஆசிரியை )

திதி:- 21- 09- 1995

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்து விட்ட என் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்நினைவு எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

இ. தெய்வேந்திரம்
(கணவர்)
(கிளை முகாமையாளர்
நீர்வேலி ப. நோ. கூ. சங்கம்.)

இராச வீதி,
அச்செழு,
நீர்வேலி.

(சி- 3155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு...

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால், ஜனாதிபதி சந்திரிகா அவரை நேரடியாக அழைக்க வேண்டும். மூன்றாந் தரப்பு மூலம் அழைப்பு விடுக்கக் கூடாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் முடிவு செய்திருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது.

மிக முக்கியமான தேசியப் பிரச்சினை ஒன்றில், நாட்டை இன்று பெரும் நெருக்கடியில் தள்ளிவிட்டிருக்கும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில், தென்னிலங்கை அரசியற் தலைவர்களுக்கு எவ்வளவு அக்கறை உண்டு என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக் காட்டு!

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாகப் பேசுவதற்கு, அந்தஸ்து கௌரவம் பார்க்கும் அளவுக்கு அரசியல் இலாபம் தேடும் சிறுமைத்தனம் தலையெடுத்து நிற்கிறது. இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் உளமார்ந்த விருப்பம் இருந்திருப்பின் ஐக்கிய தேசியக் கட்சி இத்தகைய சிரிப்புக்கிடமான நிலைப்பாட்டுக்கு வந்திருக்க முடியாது!

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் ஆழமான பற்று, மனப் பக்குவம் இருந்தால் அவர் எதிர்க்கட்சித் தலைவரை தாமே நேரில் அழைத்துப் பேசலாம். மூன்றாந் தரப்பு மூலம் அழைக்க வேண்டிய தேவையில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது கல்லில் நார் உரிப்பதாக முடியும். தமது நாடாளுமன்றப் பலம் நூல் இழையில் நலிந்து போயிருக்கும் சூழ்நிலையில் —

ஜனாதிபதி தாமே நேரில் அழைத்து ரணிலுடன் பேசுவதால் குடி மூழ்கிப் போகும் என்பதல்ல.

அரசியல் சுயலாபத்துக்கும் சுயகௌரவத்துக்கும் முக்கியத்துவங் கொடுக்க இரு தரப்பாரும் முனைவது எந்த வகையிலும் ஆக்கபூர்வமான பயனைத் தரப்போவதில்லை.

நாட்டு நலனுக்கு முதலிடங் கொடுத்து சந்திரிகாவும் ரணிலும் நேர்முகத்தில் ஒருவருக்கொருவர் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் மட்டுமே, இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து மேற்கொண்டு சிந்திக்க முடியும்.

தென்னிலங்கை அரசியற் தலைவர்கள், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துக் கருத்திணக்கம் கண்டு, தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதில் தமக்குள் இணக்கப்பாடு காணாத வரை —

இது விடயத்தில் காய் நகர்த்துவது இயலாத காரியமாகவே இருக்கும். இந்த முதற் தடை தாண்டப்பட்டால் தான் தொடர்ந்து ஓடுவதற்கு முயற்சிக்கலாம். இல்லையேல் இங்கேயே தொப்பென வீழ்ந்து போனால் நாடு தொடர்ந்து சீரழிய வேண்டியது தான்.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்பது போல —

தென்னிலங்கை அரசியற் தலைவர்களின் சுயலாபம், கௌரவப் பிரச்சினை, அந்தஸ்து, பாராட்டுதல் ஆகிய அரசியல் விளையாட்டுத்தனம், பெரிதும் பாதிப்பது வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழர்களின் சீவன்களையே!

---

உயர் வகுப்பு மாணவர்களின் நலன் கருதி

# பகிஷ்கரிப்புப் போராட்டத்தை கைவிட ஆசிரியருக்கு கோரிக்கை

## நியாயமான தீர்வு காணத் தயார் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, செப். 21

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்கு அரசாங்கம் நியாயமான முறையில் தீர்வுகாணத் தயாராக இருக்கிறது என கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

எனவே பரீட்சை ஆணையாளர் நாயகத்துடன் இந்த ஆசிரியர்கள் ஒத்துழைத்து விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் சுமுகமாக நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் பல லட்சக் கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை இந்த ஆசிரியர்கள் மனதிற் கொண்டு சேவையாற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அநேகமான பரீட்சை அதிகாரிகள் விடைத்தாள்களைத் திருத்துவதற்கு விரும்புகின்றார்கள் எனத் தெரிவித்த அமைச்சர், பல்வேறு குறிப்பிட முடியாத காரணங்களால் அவர்களால் விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் பணியாற்ற முடியவில்லை எனத் தெரிவித்தார்.

சகல பிரதம பரீட்சை அதிகாரிகளுக்கும் 98 மேலதிகப் பரீட்சை அதிகாரிகளுக்கும் கடமையாற்ற வந்தமைக்காக அமைச்சர் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

அரசாங்கத் துறை ஊழியர்களின் சம்பளங்களை மறுமதிப்பீடு செய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பி. சி. பெரேரா குழு பட்டதாரிகளின் பிரச்சினைகளை மாத்திரமின்றி பாடசாலை அதிபர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோரின் பிரச்சினைகளையும் ஆராய்ந்துள்ளது என அமைச்சர் கூறினார்.

இந்தக் குழுவின் அறிக்கை சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் — அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட மாற்றங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் தன்னிச்சையான தீர்மானம் எதையும் எடுக்க முடியாதென்றும் — அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம்மாதமொன்றுக்கு 900 ரூபாயிலிருந்து 4000 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆசிரியர்களின் மீதமுள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

கல்வித்துறையைப்பொறுத்தளவில் புதிய சம்பள அளவில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். இந்தப்பிரச்சினைகுறித்து ஆராய்வதற்கு நிரந்தரக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் ஆசிரியர்கள் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் அடங்கியுள்ளனர்.

ஆசிரியர் சேவை தொடர்பான திருத்தங்களைத் தெரிவிக்க மேலும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி கூட்டம் ஒன்றில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இலங்கை ஆசிரியர் சங்கமும் ஒருங்கிணைக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் சங்கமும் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ய நேர்ந்தது.

ஆசிரியர் தொழிலுக்கான சம்பள அமைப்பு முறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தக் குழுக்களை அரசு நியமித்துள்ளது. ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களின் நலன்களைப் பாதிக்காத விதத்தில் ஆசிரியர்கள் சேவையாற்ற வேண்டும்.

இப்படி அமைச்சர் கேட்டுக் கொண்டார். (இ-10)

## 30,000 பட்டதாரிகளுக்கு 2 ஆண்டுகளுக்குள் வேலை

கொழும்பு, செப். 21

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கு முதலீட்டாளர்களும் மற்றும் தனியார் நிறுவன உரிமையாளர்களும் தங்களது விருப்பத்தை ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளனர் எனவும் —

அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கைத்தொழில் கொள்கை பற்றிய மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர்கள் இந்த உறுதிமொழியை அளித்தனர் என்றும் — கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-10)

## விவசாய வேலைகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

சாவகச்சேரி, செப். 21

சாவகச்சேரி கமநல சேவை நிலையம் விவசாயிகளின் நலனை கவனத்திற் கொண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களை தென்பகுதியில் இருந்து தருவித்து விற்பனை செய்து வருகின்றது.

சுமார் பதின் மூன்று இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு 21 ஆயிரத்து 500 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகின்றன.

இவற்றுடன் கிருமி நாசனி தெளிகருவியும், விவசாயத்துக்குத் தேவையான விதைகள் சிலவும் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் பயற்றம் விதை, தக்காளிவிதை என்பனவும் அடங்கும்.

இதே வேளை எதிர் வரும் கால போக நெற்செய்கைக்குரிய விதை நெல் வகைகள் இம்மாத இறுதிக்குள் நிலையத்துக்கு வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையத்தால் விவசாயத் தேவைகளுக்கென 3 லீற்றர் மண்எண்ணெயே இதுவரை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது விவசாய நடவடிக்கைக்காக 10 லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. (இ-31)

## நூறுக்கு மேற்பட்ட சலூன்களில் சல்லடை!

### நீர்கொழும்பில் மூவர் கைது

திருகோணமலை, செப். 21

நீர்கொழும்புப் பகுதியில் உள்ள சுமார் நூற்றுக்கு மேற்பட்ட சிகையலங்கரிப்பு (சலூன்) நிலையங்களை கடந்த திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் படையினர் சல்லடை போட்டதாகத் தெரிகின்றது.

இந்த சலூன்களில் வேலை செய்து வந்த சுமார் நூறு தமிழர்கள் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் —

அவர்களில் மூவரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் —

கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

தெகிவளை ரயில் குண்டு வெடிப்புச் சூத்திரதாரிகளில் ஒருவர் எனக் கருதப்படும் விடுதலைப் புலிகள் சந்தேக நபர், சலூன் தொழிலாளி என்ற போர்வையில் நீண்ட காலம் கொழும்பில் தங்கியிருந்து தொழிற்பட்டு வந்தார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-150)

## திருமலைப் பேரறிஞரின் பிறந்ததின விழா

திருகோணமலை, செப். 21

திருகோணமலை தந்த பேரறிஞர் திரு. தி. க. கனகசுந்தரம் பிள்ளையின் 133 ஆவது பிறந்ததினம் கடந்த மாதம் 24 ஆம் திகதி திருமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி சம்பந்தர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை இதனை ஒழுங்கு செய்திருந்தது. பேரவையின் வெளியீடான 'சிவநெறி' முத்துக்கள் சஞ்சிகை பேரறிஞர் சிறப்பிதழாக வெளியிடப்பட்டது.

விழாவிற்கு பேரவைத்தலைவர் திரு. வி. தங்கராசா தலைமை வகித்தார். நினைவுப் பேருரையை உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபர் திரு. எஸ். நவரத்தினம் நிகழ்த்தினார். (அ-150)

---

### வாசகர் திருமுகம்

## அனுமதிக் கடிதங்கள் போய்ச்சேர வழிகிடைக்குமா?

1994 ஆம் ஆண்டு க. பொ. த. ப (உ/த) பரீட்சைக்குத் தோற்றி யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் பலருக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 6- 6- 96இல் அனுப்பிய கடிதங்கள் 16-8-96இல் தான் கிடைத்தன.

இக்கடிதங்களுக்கு உரியவர்கள் இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ளனர்.

இந்த அனுமதிப் பத்திரங்களை உரிய மாணவர்களுக்கு அனுப்ப முடியாத நிலையில் பல பெற்றோர் உள்ளனர். இந் நிலையில் உள்ள பெற்றோர்களில் நானும் ஒருவன்.

இவ்விடயத்தில் யாழ். அரச அதிபர், பல்கலைக்கழக துணைவேந்தர், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, கல்வித் திணைக்களம் ஆகியன தலையிட்டு அந்த மாணவர்களுக்குக் கடிதங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும்.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு உதவினால் இந்த மாணவர்கள் தமது முக்கிய அபிலாசையான உயர் கல்வியைப் பெற முடியும்.

இம்மாணவர்களின் நன்மை கருதி சகல தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்பட்டு இதற்கான வழிமுறைகளை வகுத்துச் செயற்பட வேண்டும்.

மிகக் கஷ்டப்பட்டு அவர்கள் பெற்ற வாய்ப்பை கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத பழமாக்கிவிடக் கூடாது. அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் தமது உயர்கல்வியைப்பெற முழுமனதோடு எல்லோரும் உதவ வேண்டும்.

கா. அருந்தவராசா

மதவடி,
தொண்டமானாறு.

## எங்களுக்கு மட்டும் இல்லையா?

வடமராட்சிப் பகுதியில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோர், விதவைகள் உதவிப் பணம் பெறுவோர், ஊனமுற்றோருக்கான உதவிப் பணம் பெறுவோர் ஆகிய தரப்பினர்களுக்குப் பல பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

வாளி, பாய், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், வெள்ளைப் பொப்ளீன், சீத்தைத் துணிகள் என்பவற்றுடன் பெண்களுக்குச் சேலைகளும், ஆண்களுக்குச் சாரங்கள், சால்வைகள், ரீசேட்டுகள் என்பனவும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மேற்கூறிய உதவிப்பணம் பெறும் வசதியற்ற மக்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

இது விடயத்தில் பொறுப்பான அதிகாரிகளுக்கு ஏன் இந்தப் பாரபட்சம்?

தென்மராட்சியில் வாழும் வசதி குறைந்த மக்களுக்கு வழங்குவதற்கென்று இப்பொருள்கள் அதிகாரிகளின் கைகளுக்கு வந்து கிடைக்கவில்லையா? அல்லது...

உதவிப் பணம் பெறும் ஏழைகளின் மனச்சாந்திக்காவது உண்மையில் என்ன நடந்தது என்பதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெளிப்படுத்துவார்களா?

செ. தங்கவேல்

சரசாலை தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்குடா எண்ணெய்க் குதங்கள் வெளிநாட்டு கம்பனிகளுக்கு குத்தகை

திருகோணமலை, செப் 21

திருகோணமலை மாவட்டம் சீனக்குடா பகுதியில் உள்ள நூற்றுப்பத்து பாரிய எண்ணெய்க் குதங்களையும் பல்தேசியக் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்திருக்கின்றது.

இது குறித்து ஆராய்ந்து உரிய சிபார்சுகளைச் செய்வதற்காக மூன்று பேரைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றையும் அரசு நியமித்திருக்கின்றது.

சிங்கப்பூர், கொரிய நாட்டுக் கம்பனிகள் இந்த எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்குப் பெறவிரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குதங்கள் விவகாரத்தில் இந்தியா அதீத அக்கறை கொண்டிருப்பதும் —

## இந்தியா பச்சைக் கொடி

தனது இணக்கமின்றி பிற நாடுகளுக்கு அல்லது அவற்றின் நிறுவனங்களுக்கு இந்தக் குதங்களை இலங்கை வழங்கக் கூடாது என்று இந்தியா வற்புறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த விடயத்தை 1987இல் செய்யப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்த இணைப்பிலும் இந்தியத் தரப்பு புகுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தக் குதங்களை வெளிநாட்டுக் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு விட இந்தியா பச்சைக்கொடி காட்டியிருப்பதாகத் தெரியவருகின்றது.

(உ-150)

ஈழ அகதிகளின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு நெடுந்தீவு கரையைச் சேர்ந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பாதுகாப்பில் உள்ள இவர்கள் தமது சொந்த இடத்துக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களைச் சொந்த இடத்துக்கு அனுப்ப வேண்டிய நடவடிக்கைகளை உதவி அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

(இ-3)

தாக்குதலுக்கு..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வந்தபோதே நீதிமன்ற வளாகம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் நிறைந்து பதற்றமாகக் காணப்பட்டது.

நீர்கொழும்பு சரித்திரத்தில் பட்டப் பகலில் இவ்வாறு நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இது குறித்து நான் பிரதமருக்கு உடன் அறிவித்தேன். அவர் விசாரணைக் குழுக்களை விரைந்து அனுப்பியுள்ளார். நீதியான — பக்கச்சார்பற்ற விசாரணை நடக்கும்; உண்மைகள் வெளியாகும் என எதிர்பார்க்கிறேன்.

''இந்தத்தாக்குதலுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும். இந்தத் தாக்குதலிலிருந்து ஜனாதிபதியின் பலவீனமான நிர்வாகம் தெரிகிறது. பட்டப் பகலில் — சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் — நெடுஞ்சாலையில் — இவ்வாறான படுகொலை நடக்குமாயின் இந்த நாட்டில் நிலவும் அமைதி தான் என்ன?

ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான படுகொலைகள் நிகழ்ந்தன எனக் குற்றஞ்சாட்டப்பட்டது இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றதை நான் எதிர்த்து வந்தேன். ஜனாதிபதி சந்திரிகா இந்த நிலைமையை மாற்றுவார் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் படுகொலைகள் தொடர்கின்றனவே!''—என்றார் அனுரா.

(உ-3-10)

## முஸ்லிம்களுக்கு 2 மணித்தியாலம் லீவு

கொழும்பு, செப். 21

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் முஸ்லிம் ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் சமயத் தொழுகைக்காக பிற்பகல் 1.00 மணியிலிருந்து 3.00 மணி வரை 2 மணித்தியாலங்களுக்கு மேற்படாத லீவு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது பற்றிய சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ளார் என ''தினமின'' நாளிதழ் தெரிவிக்கிறது.

(இ-10)

அகதி...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

அகதிகள் அந்தஸ்து அளிப்பதன் மூலம் இந்தப் புதிய அகதிகளுக்கு நிவாரணம் கிடைக்க உள்ளது.

ஒரு குடும்பத்தில் வயது வந்த ஒருவருக்கு 75 ரூபாவும் மற்றவர்களுக்கு 60 ரூபாவும் உதவித் தொகை கிடைக்கும். அரிசி குறைந்த விலைக்கு — அதாவது கிலோ 57 சதத்துக்கும்—கிடைக்கும். மற்றைய அத்தியாவசியப்பொருள்களும் வழங்கப்படும்.

இராமேஸ்வரத்துக்கு அகதிகள் வருவது இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

(இ-4)

## கனேடிய நீதியரசருடன் பீரிஸ் சந்திப்பு

ஒட்டாவா, செப். 21

கனடா சென்றுள்ள நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் கனடாவின் பிரதம நீதியரசர் அன்ரோனியோ லோமரை ஒட்டாவாவில் உள்ள உயர் நீதிமன்ற கட்டடத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

கனடாவில் உள்ள சிறுபான்மை இனத்தவரின்—கியூபெக் மாநிலம்—தொடர்பான பிரச்சினைகளை கனடா அரசுகள் கையாண்ட விதம் குறித்து அமைச்சர் பீரிஸ் லோமரிடம் கேட்டறிந்தார்.

(உ-3)

வன்னியில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்போர் நாளாந்தம் நொச்சிமோட்டை ஊடாக வவுனியா வர அனுமதிக்கப்படுவர்.

இந்த நடைமுறை புதன் கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக அரசசிவில் அதிகாரிகளுக்கு இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

தென்பகுதியைச் சேர்ந்த அரச ஊழியர்கள், வன்னிப் பகுதிக்கு சென்றுதிரும்பிவரும் போது, இடம் பெயர்ந்த மக்களோடு அகதி முகாம்களுக்கு செல்லத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தாம் தென்பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட அரச ஊழியர்கள் என்பதை நிரூபிக்கும் வகையிலான ஆவணங்களை வைத்திருக்க வேண்டும் என்றும் —

அந்த ஆவணங்களைச் சமர்ப்பித்தால் அவர்கள் அகதிகள் தங்கவைக்கப்படும் நலன்புரி நிலையங்களுக்குக் கூட்டிச் செல்லப்பட மாட்டார்கள் என்றும் —

நேரடியாக வேப்பங்குளம் இடைத்தங்கல் முகாம் ஊடாக, ரயில்வே நிலைய இடைத்தங்கல் முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு, ரயில் மூலம் தென் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் —

கேணல் எஸ் பி. ஏங்காதிர தெரிவித்திருக்கின்றார்.

(உ-3-150)

மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வெடிப்பை அடுத்து அப்பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் ஆரம்பிக்கப்பட்டது.

அதிர்ஷ்டவசமாக பாடசாலை விடுமுறை நாள் என்பதாலும் காலையில் நேரத்துடன் குண்டு வெடித்ததாலும் பெரும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

(உ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராஜா பரமேஸ்வரி

திருநெல்வேலி கிழக்கு, சட்டநாதர் வீதியைச் சேர்ந்த நடராஜா பரமேஸ்வரி காலமானார். அன்னார் க நடராஜா (நகை வியாபாரி) அவர்களின் அன்பு மனைவியும், கேதீஸ்வரன் (அரச நில அளவையாளர்), திருமதி மனோரஞ்சினி தர்மகுலசிங்கம் (லண்டன்), சுந்தரமூர்த்தி (ஜெர்மனி), யோகேந்திரன் (நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயாரும், பொற்செல்வி (ஆயுள் வேத வைத்தியர், யா.ம.ச), தர்மகுலசிங்கம் (லண்டன்) கலாநிதி (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மீனாவின் அன்புப் பேர்த்தியாரும், திருமதி இராசலட்சுமி பரமானந்தம், திருமதி சரஸ்வதி காசிப்பிள்ளை, திரு பொ. தியாகராஜா (இராசையா அன் சன்ஸ், மருந்துக் கடை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரவணமுத்து, வைத்திலிங்கம், வே. கமலேஸ்வரி, மு. கமலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.09 96) ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு இல. 89, சட்டநாதர் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்பாட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
க. நடராஜா
(கணவர்)

இல. 89, சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (42811)

## பரவலாகத் தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்

### வன்னியில் விசேட பயிற்சி

திருகோணமலை செப். 21

மழைகாலம் ஆரம்பித்ததும் வடக்கு — கிழக்கில் பரவலாகத் தாக்குதலை நடத்த விடுதலைப்புலிகள் திட்டமிட்டு வருகின்றனர். அதற்காக வன்னியில் பல படையணிகளுக்கு புலிகள் விசேட பயிற்சி வழங்கி வருகின்றார்கள்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ''தினமுரசு'' வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் புலிகளின் புதிய அணிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகின்றது என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(உ—150)

## வடக்கு-கிழக்குப் பகுதியில் யுத்த நிறுத்தம் வேண்டும்

### ஜனாதிபதியிடம்கூட்டணிவலியுறுத்து

கொழும்பு, செப். 21

வடக்கு — கிழக்கில் இடம்பெற்று வரும் அசாதாரண நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும். அத்துடன் யாழ்ப்பாணத்துக்கான உணவு விநியோகத்தை துரிதப்படுத்த வேண்டும். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டத் தூதுக் குழு ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

சுமார் 2 மணிநேரம் நடந்த இந்தப்பேச்சுவார்த்தை ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் நடைபெற்றது.

(இ-3)

## பெரிய விளானைச் சேர்ந்த பெண் கண்டியில் கைது

கொழும்பு, செப். 21

வீடு ஒன்றைச் சோதனையிட்ட பொலீஸார் 25 வயதுடைய யாழ்ப்பாணப் பெண் ஒருவரை கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்தனர்.

கண்டி கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் உள்ள சியம்பலகஸ்தென என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது

யாழ்ப்பாணம், பெரிய விளான் பகுதியைச் சேர்ந்த பி. ஜே. எம். சந்தியாப்பிள்ளை என்ற அந்தப் பெண் கண்டி மாஜிஸ்திரேட் முன் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட சமயம், எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இப் பெண்ணை ஓர் இளம் நபர் யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த 13 ஆம் திகதி அழைத்து வந்து குறிப்பிட்ட வீட்டில் விட்டதாகவும்—

'அதன் பின் அந்த நபர் திரும்பி அங்கு வரவில்லை என்றும்—பொலீஸார் தெரிவித்தனர்.

அந்த நபர் குறித்த விவரம் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-3-150)

## வலி.மேற்குப் பகுதியில் நிவாரணம் இல்லை

வலி. தென்- மேற்கு செப். 21

வலிகாமம் மேற்குப் பகுதியில் இலவச நிவாரண உலர் உணவுப் பொருள் விநியோகம் இன்னும் இடம்பெறவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ள போதிலும் லொறிகள் மூலம் பொருள்கள் இன்னமும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிவாரணப் பொருள் விநியோகத்தில் நீண்ட தாமதம் ஏற்பட்டிருப்பதனால் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-145)

## அனுராவைக் கொல்ல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தப்பட்டது.

வாகன அணியைக் கலைத்துக்கொண்டு வந்த ஒரு வெள்ளை வானில் இருந்தே சரமாரியாக வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

அனுராவின் வாகனத்துக்குப் பின்னால் ஆறாவது அல்லது ஏழாவதாக வந்து கொண்டிருந்த வாகனமே தாக்குதலுக்கு இலக்கானது.

அதில் இருந்த கட்டுநாயக்கா-சீதுவ மாநகரசபை பிரதி மேயர் சில்வின் ஜே. பெரேரா மற்றும் றிச்சேர்ட் பெர்னாண்டோ, லீலாரட்ண ஆகியோர் உட்பட நால்வர் இத்தாக்குதலில் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடைபெற்ற போதும் அனுராவின் வாகன அணியிலிருந்த ஏனைய வாகனங்கள் அவ்விடத்தில் நிறுத்தப்படாமல் நீர்கொழும்பில் உள்ள விஜேபால மெண்டிஸின் வீட்டுக்கு விரைந்தன. அங்கு வைத்தே தாக்குதலின் விவரம் அனுராவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

வெள்ளை 'ஹை-ஏஸ்' வாகனம் ஒன்றைச் சாரதியுடன் கடத்திச் சென்ற கும்பல் ஒன்றே இத்தாக்குதலை நடத்தி விட்டு, வானை நடு வழியில் கைவிட்டு, வேறு ஒரு வாகனத்தில் தப்பிச் சென்றிருக்கின்றது.

வான் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது! சாரதியும் மீட்கப்பட்டார்.

ஐந்து பேர் கொண்ட கும்பலே இத்தாக்குதலை நடத்தியதாகக் கூறிய வான் சாரதி, அவர்களின் அங்க அடையாளங்களைப் பொலீஸாருக்கு விவரித்துள்ளார். அவர்களைக் கண்டால் தம்மால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அவர் சொன்னார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் (எஸ் எஸ்.பி) லோரன்ஸ் அமரசேன சம்பந்தப்பட்ட வானில் இருந்த கொலைஞர் குழுவினுடையது எனக் கருதப்படும் 21 விரல் அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும்—

வெற்றுத் தோட்டாக்கள் ஆறு மீட்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

(உ-3-4-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 21-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org